செ.வெ.எண்: 356 நாள்: 14.06.2019

**அறந்தாங்கி அரசினர் பாலிடெக்னிக் கல்லூரியில் துணைக்கலந்தாய்வு மூலம் முதலாமாண்டு மாணவர் சேர்க்கைக்கு விண்ணப்பிக்கலாம்.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

அறந்தாங்கி அரசினர் பாலிடெக்னிக் கல்லூரியில் துணைக்கலந்தாய்வு மூலம் முதலாமாண்டு மாணவர் சேர்க்கைக்கு விண்ணப்பிக்கலாம். இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது.

அறந்தாங்கி, அரசு பாலிடெக்னிக் கல்லூரியில் பாலிடெக்னிக் (Diploma) படிப்பில் அமைப்பியல் (Civil), இயந்திரவியல் (Mechanical), மின்னணு மற்றும் தொடர்பியல் (ECE), கணிப்பொறியியல் (Computer Science) மற்றும் வணிகவியல் (Commerce) ஆகிய பாடப்பரிவுகளுக்கான முதலாம் ஆண்டு சேர்க்கைக்கு 10 ஆம் வகுப்பு முடித்த மாணவ, மாணவியர்கள் சேர்ந்து படிக்கலாம். முதலாம் ஆண்டு சேர்க்கைக்கான முதலாம் கட்ட கலந்தாய்வு கடந்த 28.05.2019 மற்றும் 29.05.2019 ஆகிய நாட்களில் நடைபெற்றது.

அப்போது, உரிய காலத்தில் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்காத மாணவர்கள், தற்சமயம் பயன்பெறும் வகையில், அவர்களது நலன் கருதி, தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் அவர்கள், தமிழக அரசின் சார்பாக துணைக்கலந்தாய்வு நடத்த அனுமதித்துள்ளார். ஆகவே, ஏற்கனவே முதலாம் ஆண்டு விண்ணப்பங்கள்

சமர்ப்பிக்காத மாணவ, மாணவியர்கள் 28.06.2019 மாலை வரை கல்லூரி அலுவலகத்தில் விண்ணப்பங்கள் பெற்று விண்ணப்பித்து, அரசால் வழங்கப்பட்டுள்ள இவ்வாய்ப்பை நன்கு பயன்படுத்தி, அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி முதலாம் ஆண்டு துணைக் கலந்தாய்வில் கலந்து கொண்டு பயனடையலாம். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**